முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1223

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

03.02.2023, வெள்ளிக்கிழமை

1. பிரம்ம ஞானம் கொண்ட அரங்கனே
   பிரணவ சூட்சுமம் கொண்ட தேசிகனே
   வரம்பல பெற்று என் சக்தியாக
   வையகத்தை ஆளவந்த குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு அருளுவேன்
   சுப்ரமணியர் யானும் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் தை மாதம் 20 ம் நாள் 03.02.2023, வெள்ளிக்கிழமை)
   வரங்களாக அரங்கன் சக்தி வையகம் எங்கும்
   வள்ளல் தன்மையாக நிரம்பி மக்களிடை
3. மக்களிடை தர்மமாக தயவுசிந்தையாகமாறி
   வழங்குவேன் ஆற்றல் தர்மபலமாக உலகினில்
   பெருமைபட பரவிபரவி இனிதே
   பேருலகம் தர்ம லோகமாகி
4. ஆகியே அரங்கன் அவதார நோக்கமாக
   ஐயமற உலகமெல்லாம் ஆளுமை ஞானஆட்சியாக
   வலுவான ஞானத்தலைமைகள் கொண்ட
   வையகத்தை மாற்றும் மாந்தர்கள் மூலமாக
5. ஆகவே இனிதே பேரற்புதம்
   அரங்கனைகொண்டு இந்த கலியினில் நடத்துவேன்
   ஜெகமக்கள் ஓங்காரக்குடில் நோக்கி
   செப்பிடுவேன் தொடர்ந்து வந்தால் போதும்
6. போதுமப்பா மாற்றம் சடுதி புண்ணிய வழிகளாக மாறும்
   ஆற்றல்பட எங்கும் இயற்கை பலமும் அறமாக நல்ல ஆளுமைகளும் கூடி
   மாற்றங்காணும் இந்த உலகம் ஞானபூமியாக
   மாறுதல் பெறும் அரங்கன் தயவால் ஞான ஆட்சியுமாக

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–